தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

**வெளி சந்தைக்கு வருகிறது 50 லட்சம் டன் அரிசி : விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை**

மும்பை ;மத்திய அரசு, அரிசி விலையை கட்டுப்படுத்தும் நோக்கில், அதன் உபரி அரிசி கையிருப்பில் இருந்து, 50 லட்சம் டன் அரிசியை, வெளிச் சந்தைக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது. இதன் மூலம், அரிசி விலை, கட்டுக்குள் வரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

பணவீக்கம்:கடந்த மே மாதம், மொத்த விலை பணவீக்கம், 6.01 சதவீத மாக உயர்ந்தது. இதையடுத்து, அரிசி, கோதுமை, பருப்பு, காய்கறிகள், சர்க்கரை, பால், சமையல் எண்ணெய் உள்ளிட்ட, 22 உணவுப் பொருட்களின் விலையை, மத்திய அரசு கூர்ந்து கவனித்து வருவதாக, மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, முதல் நடவடிக்கையாக, உயர்ந்து வரும் அரிசி விலையை குறைக்கும் நோக்கில், இந்திய உணவுக் கழகத்திடம் உள்ள உபரி அரிசியில், 50 லட்சம் டன் வெளிச் சந்தைக்கு அனுப்பப்பட உள்ளது.இந்த அரிசி விலையை நிர்ணயம் செய்வது, ஒப்பந்த புள்ளி கோருவது உள்ளிட்ட பணிகளை, மத்திய வேளாண் அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது.நடப்பு ஜூன் மாத துவக்க நிலவரப்படி, மத்திய அரசின் முகமை அமைப்பான இந்திய உணவுக் கழகம் வசம், 2.82 கோடி டன்னிற்கும் அதிகமான அரிசி கையிருப்பில் உள்ளது. இதில், 76 லட்சம் டன் நெல், அரவைக்காக, ஆலைகளிடம் காத்திருக்கின்றன.

அரவை கட்டணம்:தற்போது, ஒரு குவிண்டால் அரிசிக்கான கொள்முதல் செலவு, 2,410 ரூபாயாக உள்ளது. இதில், ஒரு குவிண்டால் நெல் கொள்முதலுக்கு, 1,910

ரூபாயும், ‘வாட்’ வரி மற்றும் அரவை கட்டணம் ஆகியவற்றுக்கு முறையே, 222 ரூபாய் மற்றும், 38 ரூபாயும் செலவாகிறது. இத்துடன், இதர கையாளும் செலவினங்களும் உள்ளன.

உபரி கோதுமை:நடப்பு 2013 – 14ம் சந்தைப் பருவத்தில் (அக்., – செப்.,), சாதாரண ரக நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, 1,301 ரூபாயாக உள்ளது. இத்துடன், போக்குவரத்து செலவு, கிடங்கு கட்டணம் உள்ளிட்ட இதர செலவுகளையும் சேர்த்தால், ஒரு குவிண்டால் அரிசியின் விலை, 2,755 ரூபாய் என்ற அளவிற்கு வருகிறது.இதன் அடிப்படையில், ஒரு குவிண்டால் அரிசியின் வெளிச் சந்தை விலை தீர்மானிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து, இந்திய உணவுக் கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:கடந்த சில ஆண்டுகளாக, உபரி கோதுமை, வெளிச் சந்தையில், மொத்த விலையில், வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், கடந்த 10 ஆண்டு களில், தற்போது தான், மத்திய அரசு, இந்த அளவிற்கு அரிசியை வெளிச் சந்தையில் விற்பனை செய்ய உள்ளது.கடந்த, 1994 – 95ம் ஆண்டு, இந்திய உணவுக் கழகம், சிறிய அளவில், வெளிச் சந்தையில் அரிசி விற்பனையை மேற்கொண்டது. மாநில அரசு:அதே சமயம், கடந்த, 2012 – 13 மற்றும் 2013 – 14ம் சந்தை பருவங்களில், மத்திய அரசு, மாநில அரசுகளின் வெளிச் சந்தை விற்பனைக்கு, முறையே, 1.40 லட்சம் டன் மற்றும், 2.40 லட்சம் டன் அரிசியை நேரடியாக ஒதுக்கியது. ஆனால், அவற்றை மாநில அரசுகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவில்லை.

இவ்வாறு, அவர் கூறினார்.

**சர்க்கரை இறக்குமதி வரியை40 சதவீதமாக உயர்த்த முடிவு**

புதுடில்லி ;சர்க்கரை மீதான இறக்குமதி வரியை, தற்போதைய 15 சதவீதத்திலிருந்து, 40 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக, மத்திய உணவு துறை அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் தெரிவித்தார்.அவர் மேலும்

கூறியதாவது:நாடு தழுவிய அளவில், சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகை, 11 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.இதை கருத்தில் கொண்டு, சர்க்கரை ஆலைகளுக்கு, வங்கிகள் மூலம் கூடுதலாக, 4,400 கோடி ரூபாய் வட்டியில்லா கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடனை திரும்ப செலுத்த துவங்கும் காலம், மூன்றில் இருந்து ஐந்தாண்டு களாக உயர்த்தப்பட்டுள்ளது. எனினும், விவசாயிகளின் நிலுவையை உடனடியாக தீர்ப்போம் என, சர்க்கரை ஆலைகள் உறுதி அளித்தால் மட்டுமே, கூடுதல் கடன் வழங்குவது குறித்து மத்திய அரசு அறிவிக்கும்.மேலும், உள்நாட்டில், சர்க்கரை விலை சரிவடைவதை தடுக்கும் வகையில், இதன் இறக்குமதி மீதான வரியை, 15 சதவீதத்திலிருந்து, 40 சதவீதமாக உயர்த்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.சர்க்கரை ஏற்றுமதிக்கு, டன் ஒன்றுக்கு, 3,300 ரூபாய் மானியம் வழங்கும் திட்டம், நடப்பாண்டு செப்டம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பெட்ரோலுடன், 5 சதவீத எத்தனால் கலப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனினும், இது, 2 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. சர்க்கரை ஆலைகள் மற்றும் எண்ணெய் நிறுவனங்களுக்கு இடையே, எத்தனால் விலை தொடர்பான பிரச்னை தான் இதற்கு காரணம்.இருந்தபோதிலும், பெட்ரோலுடன் கலக்கப்படும் எத்தனால் அளவை, 10 சதவீதமாக உயர்த்த, முயற்சி மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**சொட்டுநீர் பாசனம் செய்வதில் விவசாயிகள் அதிகளவு ஆர்வம்**

ரிஷிவந்தியம் : பாலப்பட்டு கிராமத்தில் விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் முறையை மேற்கொள்வதில் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக எதிர்பார்த்த அளவு பருவ மழை இல்லாததால் ஆறு, ஏரிகள் வறண்டு காணப்படுகிறது. விவசாயத்திற்கு போதிய தண்ணீர்

இல்லாததால் கரும்பு மற்றும் நெல் பயிர்கள் காய்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகி வருகின்றனர். இந்தாண்டு ஜூன் மாதம் துவங்கியும் மழை பெய்யவில்லை. அருகில் உள்ள மணிமுக்தா அணையும் தண்ணீர் இல்லாமல் வறண்டுள்ளது. வறட்சியை சமாளிக்க உதவும் சொட்டுநீர் பாசன திட்டத்திற்கு அரசு 100 சதவீத மானியத்தை வழங்குகிறது. இதனால் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டை தடுக்க ரிஷிவந்தியம் ஒன்றியம் பாலப்பட்டு, சிங்காரப்பேட்டை மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் முறையை மேற் கொள்ள டிராக்டரால் உழுது சொட்டுநீர் பாசன குழாயை பூமியில் பதிக் கும் பணியில் மேற் கொண்டு வருகின்றனர்.

**மரவள்ளி அறுவடை பணிகள் தீவிரம்**

கச்சிராயபாளையம் : கல்வராயன் மலையில் மரவள்ளி அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது.

கல்வராயன் மலைப்பகுதியில் மரவள்ளி அதிகள வில் பயிரிடப்படுகிறது. இங்கு நவம்பர், டிசம்பர் மாதங்களில் மானாவாரியாக சாகுபடி செய்த மரவள்ளி அறுவடைக்கு தயா ராக உள்ளது. இந்த ஆண்டு போதிய மழையின்றி, விளைச்சல் குறைந்தது. இதனால் போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் கவலையில் உள்ளனர். தற்போது ஒரு டன் ரூ 6500 மட்டுமே கிடைப்பதால் செலவு செய்த தொகைக்கே ஈடாகவில்லை என வேதனையுடன் தெரிவிக்கின்றனர். இங்கு விளையும் கிழங்குகள் தனியார் புரோக்கர்கள் மூலம் விற்பனை செய்வதால் குறைவான விலைக்கே வாங்கிச் செல்வதால் நஷ்டம் அடைகின்றனர். மலைவாழ் மக்களுக்கு மரவள்ளி சாகுபடி முக்கிய வாழ்வாதாரமாக உள்ளதால் அரசு சார்பில் மரவள்ளி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

**இயற்கை உரத்தில் நெல் பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம்**

மரக்காணம் : சம்பா பட்டத்தில் இயற்கை உரங்களான அவரி, சணப்பை தக்கை பூண்டு பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
மரக்காணம் ஒன்றியத்தில் கந்தாடு, புதுப்பாக்கம், நடுக்குப்பம், அனுமந்தை கடற்கரையோர கிராமங்களில் போர்வெல் மூலம் விவசாயம் செய்கின்றனர். அசப்பூர், ஆலத்தூர், காணிமேடு, கொள்ளு மேடு கிராமங்களில் ஆற்றின் பாசனத்தையும், கிணற்று நீரை பயன்படுத்தியும் சாகுபடி செய்கின்றனர் . தற்போது சொர்ணவாரி பட்டம் கை கொடுக்காததால் சம்பா பருவத்தில் நல்ல மகூலை பெற விவசாயிகள் தயாராகி வருகின்றனர். இதற்காக பசுந்தாள் உரங்களான அவுரி, சணப்பை, தக்கைபூண்டு விதைக்க நிலங்களை உழுதுள்ளனர். இயற்கை மண்ணிற்கு தேவையான தழைசத்து கிடைப்பதால் ரசாயன உரத்தின் பயன்பாடு மற்றும் செலவு குறைகிறது. வரும் சம்பா பருவத்தில் 30 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெல் நடவு செய்யப்படும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கூறுகின்றனர்.இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை நன்றாக பெய்யும் என வானிலை தகவல்களும் கூறுவதால் விவசாயிகள் முன்கூட்டியே விவசாய பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**வியாபாரிகளை கண்டித்து விவசாயிகள் முற்றுகை**

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டியில் பணம் பட்டுவாடா செய்ய கமிஷன் கேட்கும் வியாபாரிகளை கண்டித்து விவசாயிகள் முற்றுகையில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.
உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டிக்கு கொண்டு வரும் பொருட்களுக்கு உரிய விலை நிர்ணயிப்பது கிடையாது என விவசாயிகள் அதிருப்தியில் இருந்தாலும்

இங்கு அதிகளவு பொருட்களை கொண்டு வருகின்றனர்.கமிட்டியில் எடையிடும் போதும் பொருட்கள் சிந்துவதால் எடை குறைகிறது. பொருட்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதில் தாமதமாகிறது.

இரவு வெகு நேரம் விவசாயிகள் காத்திருக்க வேண்டியதாகிறது. மாலை 6 மணிக்கு பணம் பெற காத்திருக்கும் விவசாயிகளிடம் ரூ. ஆயிரத்திற்கு ரூ. 20 கமிஷன் கொடுத்தால் உடனடியாக பணம் பட்டுவாடா செய்வதாக குற்றச்சாட்டு உள்ளது.நேற்று வந்த விவசாயிகள், வியாபாரிகள் பணம் பட்டுவாடாசெய்வார்கள் என மாலை 6 மணிக்கும் மேலாக காத்திருந்தனர். அப்போது வியாபாரிகளில் சிலர், பணம் உடனடியாக கிடைக்க ஆயிரத்திற்கு ரூ. 20 கமிஷன் கொடுங்கள் என கூறினர். அதிர்ச்சியடைந்த விவசாயிகள், வியாபாரிகளின் போக்கை கண்டித்து மாலை 6.45 மணிக்கு மார்க்கெட் கமிட்டி நுழைவு வாயில் பகுதியையும், கண்காணிப்பு அலுவலகத்தையும் முற்றுகையிட்டனர். தகவல் அறிந்த போலீசார் சமரசம் செய்து பணம் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுத்தனர். இது போன்ற நடவடிக் கைகளை கட்டுப்படுத்த அதிகாரிகள் முன்வர வேண்டும்.

**தொடர் வறட்சியால் மணிலா பயிர்கள் சேதம்**

விழுப்புரம் : பருவமழை பெய்யாமல் தொடர்ந்து வறட்சி நீடிப்பதால், சோழகனூர் பகுதியில் மணிலா செடிகள் காய்ந்து வீணாகி வருகிறது.

மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தென் மேற்கு மற்றும் வட கிழக்குப் பருவமழை பொய்த்து, நீர்நிலைகள் வறண்டு உள்ளது. இதனால் பாசனக் கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில், நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. பல இடங்களில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு, போதிய பாசன நீர் கிடைக்காமல், பயிர்கள் காய்ந்து வருகின்றன. இதேபோல் விழுப்புரம் அடுத்த சோழகனூர் பகுதியில் சாகுபடி செய்துள்ள மணிலா உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து

வீணாகியுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**மூலிகை தாவர கண்காட்சி**

சேலம்: மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், ஆறாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர், அறிவியல் பாடம் சார்ந்த மூலிகைத்தாவரங்களை, கண்காட்சியாக அமைத்து, விளக்கம் அளித்தனர்.

நம் அன்றாட வாழ்வில் பயன்படும், மருத்துவ குணங்கள் நிறைந்த சளி, இருமல் தொல்லையை போக்கும் துளசி, தூதுவளை, மஞ்சள் காமாலை நோயை தீர்க்கும் கீழாநெல்லி, குளிர்ச்சி தரும் சோற்று கற்றாழை, கற்பூரவள்ளி, கருவேப்பிலை, மஞ்சள், வேம்பு, பிரண்டை, ஆடுதோடா போன்ற மூலிகை தாவரங்களும் கண்காட்சியில், பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.நறுமண பொருட்களான வெந்தயம், சீரகம், மிளகு, லவங்கம், கிராம்பு, ஏலக்காய், முந்திரி, கடுகு போன்ற வகைகளும், கண்காட்சியில் இடம்பெற்றது. மாணவ, மாணவியர் தீபன்சக்கரவர்த்தி, காயத்திரி, நிஷா, பாலசுப்ரமணியம், ஹரிஹரன், தேன்மொழி, பூர்ணா உள்ளிட்ட குழுவினர் கண்காட்சி சிறப்பாக அமைய உதவிபுரிந்தனர். கண்காட்சியை, ஏராளமானோர், நேரில் கண்டு பயனடைந்தனர்.ஆசிரியர் பச்சமுத்து, மாணவ, மாணவியரின் ஆர்வத்தை பாராட்டி, வாழ்த்தினார். அறிவியல் ஆசிரியர் ஜெயக்குமார், கண்காட்சி ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**முட்டை விலை 360 காசாக உயர்வு**

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 360 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது.

முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 349 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 11 காசு அதிகரித்து, 360 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 385, பெங்களூரு, 375, மைசூரு, 376, ஹைதராபாத், 337, மும்பை, 375, விஜயவாடா, 331, கோல்கத்தா, 385, பர்வாலா, 316, டில்லி, 325.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர்கள், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 68 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

**விவசாயிகள் குறைதீர்க்க வரும் 27ல் கூட்டம்**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், 27ம் தேதி காலை, 10 மணிக்கு நடக்கிறது.
கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ள கூட்டத்துக்கு, மாவட்ட கலெக்டர் சுப்பையன் தலைமை வகிக்கிறார். வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை உள்ளிட்ட அரசு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து, விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட உள்ளது.விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளுக்கு தீர்வு காண விரும்பும் விவசாயிகள், கூட்டத்தில் பங்கேற்று மனு கொடுக்கலாம்.

**வெற்றிலை ஏற்றுமதிக்கு தடை விலக்கக் கோரி ஆர்ப்பாட்டம்**

தஞ்சாவூர்: வெற்றிலை ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை ரத்து செய்யக் கோரி, தஞ்சை கலெக்டர் அலுவலகம் முன், விவசாயிகள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தஞ்சை மாவட்டத்தில், வாழைக்கு அடுத்தபடியாக வெற்றிலை அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. திருவையாறு, பாபநாசம் உள்ளிட்ட பகுதிகளில், 5,000 ஏக்கரில் வெள்ளைக்கொடி வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முழுக்க, முழுக்க இயற்கை வேளாண் முறையில் சாகுபடி செய்யப்படும் திருவையாறு, பாபநாசம் வெற்றிலைக்கு மார்கெட்டில் அமோக வரவேற்பு உள்ளது. மூலிகை பயிராகவும் உள்ளதால், வெற்றிலைக்கு மவுசு அதிகரித்து வருகிறது.இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளில், மாம்பழத்துக்கு அடுத்தபடியாக வெற்றிலை ஏற்றுமதிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, வெற்றிலை விலை வீழ்ச்சியடைந்து வருவதால், இதை நம்பியுள்ள விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.எனவே, வெற்றிலை விவசாயிகளை பாதுகாக்கும் விதமாக, ஐரோப்பிய நாடுகளில் வெற்றிலை ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை ரத்து செய்ய, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்ற கோரிக்கையை வலியுறுத்தி, ஆர்பாட்டம் நடந்தது.கலெக்டர் அலுவலகம் முன் நடந்த ஆர்பாட்டத்துக்கு, காவிரி விவசாய பாதுகாப்பு சங்க செயலாளர் சுகுமாரன் தலைமை வகித்தார். ராஜேந்திரன், புகழேந்தி, அய்யாறப்பன், திருஞானம் உட்பட வெற்றிலை சாகுபடியாளர்கள் பலர் பங்கேற்றனர்.

**பயிர் காப்பீட்டு தொகை பெறுவதில் விவசாயிகள் அலைக்கழிப்பு**

முதுகுளத்தூர் ;முதுகுளத்தூர் அருகே பூக்குளம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில், விவசாயிகள் பயிர் காப்பீட்டு தொகை பெற, இரண்டு பஸ் பிடித்து செல்ல வேண்டிய பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

2012-13 ஆம் ஆண்டு மாவட்டத்தில் பொய்த்துப்போன விவசாயத்திற்கு,

பயிர்காப்பீட்டு இழப்பீட்டு தொகை வழங்கப்படும் என, அரசு அறிவித்தது. ஆய்வுக்குழுவினர் பரிந்துரைப்படி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டது. லோக்சபா தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால், பாக்கி தொகைகள் பாதிக்கப்பட்ட நெல் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. இந்நிலையில், நிலுவை தொகைகள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, தற்போது வழங்கப்பட்டு வருகிறது. முதுகுளத்தூர் அருகே பூக்குளம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட கீழ, மேலச்சாக்குளம், கண்டிலான், இளஞ்செம்பூர், மு.சாலை, காத்தாகுளம், இளஞ்செம்பூர், பூக்குளம், வீரம்பல் உட்பட 10 க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட கிராமங்களில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களில், நெல் விவசாயம் பாதிக்கப்பட்டு, 940 க்கும் மேற்பட்ட பயனாளிகள், இழப்பீட்டு தொகை வேண்டி விண்ணப்பித்திருந்தனர். இந்த விவசாயிகளுக்கு ஏற்கனவே 83.80 சதவீதம் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டது.

மீதமுள்ள 16.20 சதவீத பயிர் இன்சூரன்ஸ் இழப்பீட்டு தொகை, தற்போது பட்டுவாடா செய்யப்படுகிறது.

இளஞ்செம்பூர் செந்தூர்பாண்டி கூறியதாவது: பாதிக்கப்பட்ட விவசாயத்திற்கு அரசு வழங்கும் இழப்பீட்டு தொகை, ஏற்கனவே கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ரொக்கமாக வழங்கப்பட்டது. ஆனால், தற்போது "செக்' காக வழங்கப்படுவதால், வழங்கபட்ட "செக்' கினை பணமாக மாற்ற, இரண்டு பஸ் பிடித்து பயணிக்கும் அவலத்திற்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், நூறு நாள் வேலை திட்டத்தில் பங்கேற்ற முடியாமல் இழப்பை சந்திக்கும் பரிதாப நிலைக்கு பயனாளிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இழப்பீட்டு தொகை பெறுவதில், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்தும், கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ரொக்கமாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என, கலெக்டர் நந்தகுமாரிடம் முறையிட்டுள்ளோம்.

இதுகுறித்து கூட்டுறவு துறை அதிகாரி கூறியதாவது: கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையில் ஏற்படும் முறைகேடுகளை தடுக்கவே, பயனாளிகளுக்குரிய தொகை "செக்' காக வழங்கப்பட்டது.தற்போது, ரொக்கமாக வழங்கவேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை வைத்தால், இதுகுறித்து பரிசீலனை செய்யப்படும்", என்றார்.

**தரமான விதையை விதைக்க விவசாயிகளுக்கு ஆலோசனை**

பரமக்குடி,: நல்ல விதைகளே, நல்ல விளைச்சலுக்கு ஆதாரம் என, விதைப்பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் மீனாட்சிசுந்தரம் தெரிவித்தார். அவர் கூறியதாவது: நல்ல தரமான விதை மூலம் அதிக சாகுபடி பெற முடியும். சாகுபடிக்கு தேவையான உரம், பூச்சி மருந்துகள், நல்ல தண்ணீர், விவசாய கூலி என அனைத்து இடுபொருட்களின் விலையும் அதிகரித்து வருகிறது. ஆகவே, விதையை தேர்வு செய்யாவிட்டால், அனைத்து உழைப்பும் வீணாகி விடும். விவசாயிகள் தங்களுடைய விதைகளை, தரமானதா என்று அறிய ஏதுவாக, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றளிப்புத் துறையின் சார்பில், பரமக்குடியில் செயல்பட்டு வருகிறது. ஆய்வுக்கட்டணம் 30 ரூபாய் ஆகும். மேலும், விபரங்களுக்கு, வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், சிங்காரத்தோப்பு, பரமக்குடி என்ற அலுவலகத்திற்கு சென்று தெரிந்து கொள்ளலாம்.

**மழையை எதிர்பார்த்து ஆயிரம் எக்டேரில் யூகலிப்ட்ஸ் முந்திரி இந்த முறை தேறுமா; ஆர்வத்தில் வனத்துறை**

காரைக்குடி: ஆயிரம் எக்டேரில், யூகலிப்ட்ஸ் மரக்கன்றுகளை நடுவதற்காக, நர்சரி அமைக்கும் பணியில், தமிழ்நாடு வனத்தோட்ட கழகம் ஈடுபட்டுள்ளது.சிவகங்கை மாவட்டத்தில், தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்துக்குட்பட்டு, 12 ஆயிரம் எக்டேரில்

யூகலிப்ட்ஸ் எனப்படும், தைல மரங்கள் வளர்க்கப்படுகிறது. ஆறு ஆண்டு முடிந்த மரங்கள், தமிழக அரசின், "டி.என்.பி.எல்.,', "சேஷாயி' நிறுவனத்துக்கு, ஏலம் விடப்படுகிறது. இதன் மூலம்,ஆண்டுக்கு ரூ.10 கோடி வரை, அரசுக்கு வருமானம் கிடைக்கிறது. 2 ஆயிரம் எக்டேரில், முந்திரி விளைவிக்கப்படுகிறது. இதன் மூலம், ரூ.ஒரு கோடி வரை வருமானம் கிடைக்கிறது. சிவகங்கை மாவட்டத்தில், வனத்தோட்ட கழகம், காரைக்குடி, புதுவயல், கல்லல், திருப்பத்தூர் என நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியில், கன்றுகள் (நர்சரி தோட்டம்) விளைவிக்கப்பட்டு, வனத்தோட்ட கழகத்துக்கு சொந்தமான, காப்பு காடு பகுதியில் நடப்படுகிறது. இந்த ஆண்டு, காரைக்குடியில் 150, புதுவயல் 200, கல்லல் 350, சிவகங்கை 300 என, ஆயிரம் எக்டேரில், யூகலிப்டஸ் மரக்கன்று நடப்பட உள்ளது. ஜூலையில் மழை பெய்தால், அதை தொடர்ந்து மரக்கன்று நடப்படும். இல்லையெனில், செப்டம்பரில் நடவு பணிகள் தொடங்க உள்ளன. கடந்த ஆண்டு, மழையின்றி முந்திரி விளைச்சல் இல்லை. ரூ.ஒரு கோடிக்கு, ஏலம் போன முந்திரி மரங்கள், ரூ.21 லட்சத்துக்கு மட்டுமே ஏலம் போனது.

தினமணி

**விளைச்சலை பெருக்க விதைப் பரிசோதனை அவசியம்**

பரமக்குடி,

விவசாயிகள் நல்ல தரமான விதைகளை தேர்ந்தெடுத்து விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும். இதற்காக விதைப் பரிசோதனை அவசியம் மேற்கொள்ள வேண்டும் என வேளாண்மை அலுவலர் சி. மீனாட்சிசுந்தரம் திங்கள்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது: நல்ல விதைகளே நல்ல விளைச்சலுக்கு ஆதாரம்.

விவசாயத்துக்கு முழு முதல் காரணியான விதை தேர்வினை சரியாக மேற்கொள்ளா விட்டால் விவசாயிகள் செலவிடும் உரம், பயிர் பாதுகாப்பு வேளாண் இடுபொருள்கள் உள்ளிட்ட அனைத்து உழைப்பும் பணமும் வீணாகி விடும். ஆகையால் விதைத் தேர்வினை விவசாயிகள் அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

பரமக்குடி உழவர் பயிற்சி மைய வளாகத்தில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு விவசாயிகள் சாகுபடிக்கு பயன்படுத்த இருக்கும் விதைகள் தரமானது தானா என்பதை அறிந்து கொள்ள விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுகளை பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இதனால் விதைகளின் புறத்தூய்மை ஈரப்பதம், முளைப்புத் திறன், பிற ரக விதைகளின் கலப்பு ஆகிய அனைத்தும் பரிசோதனை செய்யப்படுகிறது.

இங்கு விவசாயிகள் மட்டுமின்றி விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்களும் தங்களின் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து அறிந்து கொள்ளலாம். இதற்கான ஆய்வுக் கட்டணமாக விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.30 செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

**மீனவர் வலையில் சிக்கிய மருத்துவத்துக்கு பயன்படும் அரிய வகை மீன்**

ராமேசுவரம்:
பாம்பன் பகுதியிலிருந்து திங்கள்கிழமை மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர்களின் வலையில் மருத்துவத்துக்கு பயன்படும் அரிய வகை மீன் சிக்கியது. இந்த மீனை அதிக விலை கொடுத்து வியாபாரிகள் வாங்கியதால் மீனவர் மகிழ்ச்சியடைந்தார்.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பல வண்ணங்களில் மீன்கள் இனப்பெருக்கம் செய்து ஆழ்கடலில் பாறைகளில் வாழ்ந்து வருகின்றன. இந்த மீன்களை கரையோரப் பகுதியில் பார்ப்பது மிகவும் அரிதாகும்.

மேலும் தென்கடல் பகுதிலிருந்து மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் கடலில்

குறிப்பிட்ட தொலை தூரத்துக்குச் சென்று மீன்பிடித்து வருவதாலும் இந்த வகை மருத்துவ குணம் கொண்ட கூரல் மீன்கள் வலைகளில் சிக்குவது மிகவும் அரிதாகும்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலையில் பாம்பன் பகுதியிலிருந்து மீன் பிடிக்க சென்ற மீனவர்களின் வலையில் 10 கிலோ எடையுள்ள கூரல் மீன் சிக்கியுள்ளது. இந்த மீனை மீனவர்கள் பாதுகாப்பாக பாம்பன் பகுதிக்கு திங்கள்கிழமை காலையில் கரைக்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர்.

வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வியாபாரிகள் கூரல் மீனை போட்டி போட்டு ரூ.4ஆயிரம் வரை விலை கொடுத்து வாங்கிச் சென்றனர்.

இந்த மீனின் வயிற்றுப் பகுதியில் குழாய் அமைப்பில் இருக்கும் நரம்புகளை எடுத்து மருத்துவ கிகிச்சைக்கு பயன்படுத்த வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு வியாபாரிகள் வாங்கிச் செல்வதாக மீனவர் உசேன் தெரிவித்தார்.

**தாளவாடியில் கோஸ் சாகுபடி பரப்பளவு குறைந்தது**

சத்தியமங்கலம்:
சத்தியமங்கலத்தை அடுத்துள்ள தாளவாடி மலைக் கிராமங்களில் கோஸ் சாகுபடி பரப்பளவு குறைந்துவிட்டதால், கடந்த ஆண்டு கிலோ ரூ.4-க்கு விற்கப்பட்ட கோஸ்க்கு தற்போது ரூ.10 வரை விலை கிடைத்துள்ளது.

சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் தாளவாடியை அடுத்துள்ள எரணஹள்ளி, திகினாரை, ஜீரஹள்ளி, கல்மண்டிபுரம், அருள்வாடி, கெட்டவாடி, தமிழ்புரம், நெய்தாளபுரம் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் நீலகிரி, சேன்டேஸ், கணேஷ் போன்ற பல்வேறு ரக கோஸ் சாகுபடி செய்து வந்தனர்.

கடந்த ஆண்டு பெரும்பாலான விவசாயிகள் கோஸ் சாகுபடி செய்ததால், அதன் உற்பத்தி பன்மடங்காக அதிகரித்தது. இதனால் அதன் விலை ஒரு கிலோ ரூ.2ஆக

சரிந்தது. போதிய விலை கிடைக்காததால், கோஸ் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்தனர். நடப்பாண்டு 20 சதவீதம் மட்டுமே கோஸ் சாகுபடி செய்யப்பட்டது. பாசன வசதியுள்ள சூசைபுரம், திகினாரை, மல்லன்குழி ஆகிய பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கோஸ் பயிட்டுள்ளனர்.

சொட்டுநீர் பாசனம் மூலம் கோஸ் உற்பத்தி செய்யப்படுவதால், குறைந்தளவே தண்ணீர் தேவைப்படுகிறது. இதன் பருவகாலம் 80 முதல் 90 நாள்கள். ஏக்கர் ஒன்றுக்கு 20 டன் வரை மகசூல் கிடைப்பதால், இங்கு நீலகிரி ரக கோஸ்க்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர்.

தற்போது கிலோ ரூ.10க்கு விற்கப்படுவதால், ஈரோடு, மேட்டுப்பாளையம் கோஸ் மண்டி வியாபாரிகள் மலைப் பகுதியில் முகாமிட்டு நேரடி கொள்முதல் செய்கின்றனர்.

தாளவாடி விவசாயி எம்.மயில்சாமி சனிக்கிழமை கூறியது: கடந்த ஆண்டு கோஸ்க்கு சரியான விலை கிடைக்காததால் இந்தாண்டு அதன் சாகுபடி பரப்பளவு குறைந்துவிட்டது. இதன் காரணமாக, கோஸ் வரத்து குறைந்து விட்டதால் தற்போது கிலோ ரூ.10க்கு விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு ரூ.45 ஆயிரம் வரை உற்பத்தி செலவாகிறது. கோஸ் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. கர்நாடக மாநிலம் ஹாசன் பகுதியில் கோஸ் உற்பத்தி குறைந்துள்ளதால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்றார்.

**விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சி**

குடியாத்தம்:

குடியாத்தம், கே.வி. குப்பம் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் ஒரு நாள் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

வேளாண்மைத் துறை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) பி. பாண்டியன் தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் வ.ஜெயபாலன் வரவேற்றார்.

உலர்களம், சேமிப்புக் கிடங்கு, வணிக மையம் ஆகியன குறித்து வேளாண்மை அலுவலர் வீ.ராஜேஷ், பாரம்பரிய உணவுப் பொருள்கள், பயன்பாடுகள் குறித்து விரிஞ்சிபுரம் அறிவியல் ஆராய்ச்சி நிலைய தலைவர் ப.ஸ்ரீதர், ஒருங்கிணைந்த பண்ணை நிர்வாகம், மாற்றுப் பயிர் செய்தல் குறித்து குருவராஜபாளையம் ஒருங்கிணைந்த பண்ணை நிர்வாக இயக்குர் கிருஷ்ணமனோகரன், வேளாண் துறை சார்ந்த வட்டார பயன்பாடுகள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ஈ.ராஜேஸ்வரி, உரப் பரிந்துரைகள் குறித்து வேளாண்மை அலுவலர் எம்.அண்ணாமலை ஆகியோர் விளக்க உரையாற்றினர். திட்டக்குழு உறுப்பினர் ஜி.சம்பத் நாயுடு, ஆத்மா தலைவர் எம்.நாகராஜன், தென்னை உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் என்.ஆர்.தாஜுதீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சிறந்த விவசாயிகள் 165 பேருக்கு ஊக்கத் தொகைகளும் வழங்கப்பட்டன.

**வெற்றிலை ஏற்றுமதிக்கான தடையை நீக்கக் கோரிக்கை**

தஞ்சாவூர்:
ஐரோப்பிய நாடுகளில் வெற்றிலை ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க தமிழக முதல்வர் முயற்சி எடுக்க வேண்டும் என திருவையாறு பகுதி வெற்றிலை சாகுபடியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் திருவையாறு வட்டார வெற்றிலை சாகுபடியாளர்கள் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையனிடம் அளித்த மனு:

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு, பாபநாசம் பகுதிகளில் அதிகளவு வெற்றிலை பயிரிடப்படுகிறது. வெற்றிலை சாகுபடியை அரசின் கடன் உதவி இல்லாமல் 95 சதவீதம் இயற்கை முறையில் சாகுபடி செய்து வருகிறோம். இதன்மூலம்

லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர். இந்நிலையில் ஐரோப்பிய நாடுகளில் மாம்பழத்துக்கு அடுத்தபடியாக வெற்றிலை ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் வெற்றிலை சாகுபடியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகையால் இப்பிரச்னையில் தமிழக முதல்வர் தலையிட்டு, மத்திய அரசின் கவனத்துக்கு எடுத்துச் சென்று, வெற்றிலை ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும்.

இறால் வளர்ப்பு பயிற்சி சேர்க்கைக்கானகாலம் நீட்டிப்பு

நாகப்பட்டினம்:
நாகை மீன்வளத் தொழில் நுட்ப நிலையம் மூலம் நடைபெறவுள்ள, தொழில் முனைவோருக்கான இறால் வளர்ப்புப் பயிற்சி சேர்க்கைக்கான காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாகை மீன்வளத் தொழில் நுட்ப நிலைய இயக்குநர் (பொறுப்பு) மு. நாகூர் மீரான் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாகை மீன்வளத் தொழில் நுட்ப நிலையம் மூலம், தொழில் முனைவோருக்கான இறால் வளர்ப்புப் பயிற்சி ஜூன் 24-ம் தேதி தொடங்கப்படும் எனவும், பயிற்சி சேர்க்கைக்கான இறுதிநாள் ஜூன் 23-ம் தேதி என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது, பயிற்சி வகுப்பின் தொடக்க நாள் ஜூலை 1-ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்படி, பயிற்சி சேர்க்கைக்கான காலம் ஜூலை 1-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் பயிற்சியில் பங்கேற்க, நாகை மீன்வளத் தொழில் நுட்ப நிலைய இயக்குநரை நேரில் அல்லது 04365- 240441, 240442 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

பாசன வாய்க்கால்களை தூர்வார வேண்டும்

சிதம்பரம்:

விவசாயத்தை பாதுகாக்க தமிழக அரசு உடனடியாக நீர்நிலைகள் மற்றும் பாசன வாய்க்கால்களை தூர்வார வேண்டும் என சிதம்பரம் எம்எல்ஏ கே.பாலகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும், ஏரி, குளம், வாய்க்கால்களை ஆழப்படுத்த வேண்டும், மனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, உழவர் பாதுகாப்பு, ரேஷன் கார்டு, மருத்துவக் காப்பீடு அட்டை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சிதம்பரம் உதவிஆட்சியர் அலுவலகம் முன் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஜி.மாதவன் தலைமை வகித்தார்.

சிதம்பரம் வட்டத் தலைவர் எல்.ஜீவா, பரங்கிப்பேட்டை ஒன்றிய அமைப்பாளர் ஆர்.கருனைச்செல்வம், கீரப்பாளையம் ஒன்றியத் தலைவர் சி.தர்மதுரை, செயலாளர் ஆர்.ராஜேந்திரன், கரும்பு விவசாயிகள் சங்கம் பி.பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே.பாலகிருஷ்ணன் எம்எல்ஏ பங்கேற்று கோரிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினார். அப்போது அவர் கூறியது:

மேட்டூரிலிருந்து இந்த ஆண்டும் (ஜூன்12) விவசாயத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

மேற்கொண்டு, தற்போது தண்ணீர் திறந்தாலும் நீர் கடைமடை பகுதி வரை சென்று சேராது. ஏனெனில், பாசன வாய்க்கால்கள் தூர்ந்துபோய் உள்ளன. கடந்த இரு ஆண்டுகளாக வாய்க்கால்களை தூர் வார அரசு நிதி ஒதுக்கவில்லை. எனவே, தமிழக முதல்வர் சிறப்பு நிதி ஒதுக்கி பாசன வாய்க்கால்களை தூர் வார உத்தரவிட வேண்டும்.

தமிழகத்தில் பல லட்சம் பேருக்கு ஓய்வூதியத் தொகை நிறுத்தப்பட்டுள்ளது.

சிதம்பரம் வட்டத்தில் மட்டும் 2017 பேருக்கு கடந்த 4 மாதமாக நிறுத்தியுள்ளனர். இதனால் ஏழை எளிய மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். உடனே சரியான முறையில் ஆய்வு செய்து விடுபட்டவர்களில் தகுதியானவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மாவட்டச் செயலாளர் ஜி.ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட அமைப்பாளர் பி.கற்பனைச்செல்வம், பால் உற்பத்தியாளர்கள் சங்க மாவட்ட அமைப்பாளர் ஆர்.சதானந்தம், மாவட்ட துணைத் தலைவர் கே.கண்ணன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

பின்னர் கோரிக்கைகள் அடங்கிய மனுவை உதவிஆட்சியரிடம் கே.பாலகிருஷ்ணன் எம்எல்ஏ அளித்தார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**வரத்து குறைந்ததால் திருச்சி காந்திமார்க்கெட்டில் அவரை, பீன்ஸ் விலை கிடு, கிடு உயர்வு**

வரத்து குறைந்ததால் திருச்சி காந்தி மார்க்கெட்டில் அவரைக்காய், பீன்ஸ் விலை கிடு, கிடுவென உயர்ந்து உள்ளது.

காய்கறிகளின் விலை உயர்வு

திருச்சி காந்திமார்க்கெட்டுக்கு வெளிமாநிலங்களில் இருந்தும், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கோடை வாசஸ்தலங்களில் இருந்தும் டன் கணக்கில் காய்கறிகள் லாரிகளில் வந்து இறங்குகிறது. இங்கிருந்து திருச்சி மற்றும்

அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது. மொத்த வியாபாரிகள் காய்கறிகளை காந்திமார்க்கெட்டில் இருந்து வாங்கி சென்று, அந்தந்த பகுதிகளில் சில்லறை விலையில் விற்று வருகிறார்கள். தற்போது காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளதாலும், பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை முடிந்து மீண்டும் தொடங்கி உள்ளதாலும், காய்கறிகளின் விலை கணிசமாக உயர்ந்து உள்ளது. தற்போது காந்திமார்க்கெட்டில் சில்லறை விற்பனையில் அவரைக்காய் விலை கிலோ ரூ.60 முதல் 80–க்கும், பீன்ஸ் ரூ.80–க்கும், உருளைக்கிழங்கு ரூ.32–க்கும் விற்கப்படுகிறது. இதேபோல் கேரட் ரூ.30–க்கும், பீட்ரூட் ரூ.24–க்கும், காலிபிளவர் பெரிய பூ ஒன்று ரூ.20–க்கும், பாகற்காய் ரூ.30–க்கும், முருங்கைக்காய் ரூ.50–க்கும், வெண்டைக்காய் ரூ.30–க்கும் விற்கப்படுகிறது.

வெங்காயம் விலை

இதேபோல் காந்திமார்க்கெட் மயிலம்சந்தைக்கு கர்நாடகா மாநிலத்தில் இருந்து பெல்லாரி வெங்காயங்கள் விற்பனைக்கு வருகிறது. இந்த வெங்காயங்கள் இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. வெங்காயம் சில்லறை விற்பனையில் பெரியது ரூ.30–க்கும், சிறிய வெங்காயம் ரூ.34–க்கும் விற்கப்படுகிறது. பொதுவாக சமையலுக்கு அதிகஅளவில் வெங்காயம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சமீபகாலமாக வெங்காயத்தின் விலை கணிசமாக உயர்ந்து வருவதால் இல்லத்தரசிகள் கவலை அடைந்து உள்ளனர்.

**குன்னூர் ஏல மையத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர் ஏல மையத்தில் 88 சதவீத தேயிலைதூள் விற்பனையானது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்து வருகின்ற னர். விற்பனை எண் 25–க்கான ஏலம் கடந்த 19, 20 ஆகியதேதி களில் நடைபெற்றது. மொத் தம் 15 லட்சத்து 69 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத் துக்கு வந்தது. இதில், 10 லட் சத்து 83 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 86 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாக வும் இருந்தது.

88 சதவீத தேயிலை விற்பனை

இந்த ஏலத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை யானது. விற்பனையான அனைத்து தேயிலை தூள்ரகங் களுக்கும் 1 ரூபாய் விலைஉயர்வு இருந்தது. சி.டி.சி. தேயிலை தூளின் அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு 187 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் கிலோவுக்கு 231 ரூபாய் என அதிகபட்ச விலையாக ஏலம் சென்றது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை கிலோ ஒன்றுக்கு 50 ரூபாயில் இருந்து 52 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் கிலோவுக்கு 100 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூள்

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை கிலோவுக்கு 58 ரூபாயில் இருந்து 60ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் கிலோவுக்கு 120 ரூபாயில் இருந்து 180ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 26–க்கான ஏலம் வருகிற 26, 27 ஆகிய நாட்களில் நடக்கிறது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 18 லட்சத்து 90 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.